பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 07 2024 **FRIDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாதுகாப்புத் துறையில் வீர தீர செயல்களுக்காக வழங்கப்படும் உயரிய விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்கினார்.

2. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சாதனை படைக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. நடப்பாண்டில் 10 ஆயிரம் ரயில் பெட்டிகள் உற்பத்தி செய்யப்படவுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

4. முதுநிலை படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு அடுத்த மாதம் 11ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5. இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான முதலாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி சற்றுமுன் சென்னையில் தொடங்கியது.

>>>>><<<<<

பாதுகாப்புத் துறையில் வீர தீர செயல்களுக்காக வழங்கப்படும் உயரிய விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்கினார்.

கீர்த்தி சக்ரா விருதுகள் மத்திய ரிசர்வ் காவல்படையைச் சேர்ந்த **Rajkumar Yadava, Bablu Rabha, Sambhu Ray** மற்றும் ராஷ்ட்ரிய ரைஃபில் படையைச் சேர்ந்த பவன்குமார் ஆகியோருக்கு மரணத்திற்கு பிந்தைய விருதாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

>>>>><<<<<

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சாதனை படைக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார். இப்போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்கவுள்ளவர்களுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார். ஒலிம்பிக் போட்டி என்பது வெற்றி பெறுவதற்காக மட்டுமல்ல, சிறந்த பயிற்சிக்கானது என்று அவர் கூறினார். சர்வதேச அளவில் விளையாட்டுப்

போட்டிகளில் சாதனைகளை படைப்பதற்கு தொடர் பயிற்சிகள் அவசியமாகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேர்மறை எண்ணங்கள், போதிய தூக்கம், தொடர் பயிற்சி போன்றவை வெற்றியை தேடித்தரும் என்றும் அவர் தெரிவித்தார்.

முந்தைய சாதனைகளை இப்போட்டியில் முறியடிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்திய அணியினர் செயல்பட வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்த வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>><<<<<

இந்தியா – ரஷ்யா இடையேயான வருடாந்தர உச்சிமாநாட்டில், பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, கல்வி, அறிவியல் தொழில்நுட்பம், கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுச் செயலர் திரு. வினெய் மோகன் க்வாட்ரா, இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் திங்கட்கிழமை மாஸ்கோ செல்லவுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இந்தப் பயணத்தின் போது ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுடன் விரிவான பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மாஸ்கோவில் இந்திய வம்சாவளியினருடனும், பிரதமர் கலந்துரையாடவுள்ளதாக அவர் கூறினார்.

இந்தப் பயணத்திற்குப் பின்னர், ஆஸ்திரியா செல்லும் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபருடன் பேச்சு நடத்தவுள்ளதாக திரு. வினெய் மோகன் க்வாட்ரா தெரிவித்தார்.

>>>>><<<<<

நடப்பாண்டில் 2 ஆயிரத்து 500 ரயில் பெட்டிகள் உற்பத்தி செய்யப்படவுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிறப்பு இயக்கத்தின் கீழ் இவை உற்பத்தி செய்யப்படவுள்ளதாக கூறினார்.

பத்தாயிரம் ரயில் பெட்டிகள் உற்பத்தி செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் ரயில்வே கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>>><<<<<

ஹரியானாவில் கடந்த பத்தாண்டுகளாக வளர்ச்சிப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று ஹரியானாவில் பிஜேபி நிர்வாகிகளுடன் கலந்துரையாடிய பின்னர், சமூகவலைதளப் பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஹரியானா சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி மீண்டும் வெற்றி பெறும் என்றும் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>><<<<<

முதுநிலை படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு அடுத்த மாதம் 11ஆம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.

இந்த தேர்வுகள் அன்றைய தினம், காலை – மாலை என இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும் என்று அந்த வாரியத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுதொடர்பாக கூடுதல் விவரங்களை தேசிய தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

வெளிநாடுகளில் மருத்துவப் படிப்பு பயின்ற இந்திய மாணவர்கள், நம் நாட்டில் மருத்துவ தொழிலை புரிவதற்காக நடத்தப்படும் தகுதித் தேர்வு வினாத்தாள் வெளியானதாக சமூகவலைதளங்களில் பரப்பப்படும் செய்திகள் தவறானவை என்று தேசிய தேர்வு வாரியம் எச்சரித்துள்ளது.

சமூகவலைதளங்களில் இதுபோன்று பரப்பப்படும் தகவல்களை மாணவர்கள் நம்ப வேண்டாம் என்றும் அந்த வாரியத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாளை நடைபெறவுள்ள இந்த தேர்வுக்கான வினாத்தாள் தயாரிக்கும் பணி, இன்னும் முடிவடையவில்லை என்றும் அதில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு தவறான தகவல்களை மாணவர்கள் நம்ப வேண்டாம் என்றும் தேசிய தேர்வு வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

மதுபான கொள்கை முறைகேடு தொடர்பான வழக்கில் **BRS** கட்சியைச் சேர்ந்த திருமதி. கவிதாவின் நீதிமன்றக் காவல் வரும் 18ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தில்லி சிறப்பு நீதிமன்றம் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

முன்னதாக, திகார் சிறையில் உள்ள திருமதி. கவிதா, காணொலி வாயிலாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

**>>>>><<<<<**

பிரிட்டன் நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்ததை அடுத்து, பிரதமர் திரு. ரிஷி சுனக் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

14 ஆண்டுகளுக்குப் பிறகு தொழிலாளர் கட்சி இந்த தேர்தலில் வெற்றிபெற்றது.

அக்கட்சியின் திரு. **Keir Starmer** புதிய பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

இதற்கிடையே, இந்த தேர்தலில் பெற்ற வெற்றிக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி திரு. **Keir Starmer**–ருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

உத்தரபிரதேசத்தின் **Hathras** கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இன்று, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியோர் என்றும் திரு. ராகுல் காந்தி தெரிவித்தார்.

**>>>>><<<<<**

தமிழகத்தில் படித்த இளைஞர்கள் கால்நடைப் பண்ணைகளை அமைக்க முன்வர வேண்டும் என்று பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச சந்தையில் தமிழகத்தின் பால் மற்றும் பால் பொருட்களின் பங்கு உயரவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உலக அளவில் பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

உலக பால் சந்தையில் தமிழகம் ஆதிக்கம் செலுத்த முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பால்வளத்துறையின் வளர்ச்சிக்காக கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் திரு. மனோ தங்கராஜ் அந்த அறிக்கையில் எடுத்துரைத்துள்ளார்.

>>>>><<<<<

தூய்மைப் பணியாளர்கள் நலனுக்கு உயர் முன்னுரிமை அளித்து தேசிய துப்புரவு ஆணையம் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளதாக அதன் தலைவர் திரு. வெங்கடேசன் கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் தூய்மைப் பணியாளர்களின் நலன்கள் குறித்து ஆய்வு செய்து அவர் பேசினார்.

தூய்மைப் பணியாளர்களுக்கு உரிய விடுப்புகளை வழங்க வேண்டும் என்றும் திரு. வெங்கடேசன் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

மத்திய அரசின் திட்டங்கள் பயனாளிகள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைவதற்கான இயக்கம், நித்தி ஆயோக் சார்பில் நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழகத்தில் விருதுநகர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டம், கே.வி. குப்பத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கான நலத்திட்டங்கள், ஊட்டச்சத்து, நீரிழிவு நோய்க்கான மருந்துகள் போன்றவை 100 சதவீதம் வழங்குவதற்கு இந்த இயக்கத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான முதலாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி சற்றுமுன் தொடங்கியது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்ததை அடுத்து தென்னாப்பிரிக்கா பேட் செய்து வருகிறது.

>>>>><<<<<

ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Abhay Singh – Velavan Senthilkumar** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மலேசியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு கடைசி லீக் ஆட்டத்தில் இந்த இணை, பிலிப்பைன்ஸ் இணையை வென்றது.

இப்பிரிவில் முதல் இடத்தைப் பிடித்ததன் மூலம் இந்த இணை அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Joshna Chinappa - Abhay Singh** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<<**

**Saint Denis Reunion** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Meiraba Luwang Maismam** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-10, 21-12 என்ற செட்கணக்கில் இந்தியாவின் **Bhargav Somasundara-**வை வென்றார்.

இதர ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் **Bharat Raghav, Tharun Mannepalli** ஆகியோரும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

**>>>>>END<<<<<**